செய்தித் தாளாகப் பதிவுபெற்றது.

வெள்ளிக்கிழமை தோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஸ்ரீ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அஅ] யாழ்ப்பாணம்:- நள ஸ்ரீ ஆடி மீ உ௨-ஆ வெள்ளிக்கிழமை (6-8-1976) [இல: கஅ

## ஆலய வழிபாடு

[ சைவப் புலவர் திரு. வ. சுப்பிரமணியம் ]

ஆலயம் என்பது யாது? அவ்வாலயத்தை வழிபடுதலால் நாங்கள் அடையும் பலன்கள் யாவை? என்று விசாரணை செய்து பார்ப்போம். 'ஆலயம்' என்னும் சொல் ஆ+லயம் என்ற 2 சொற்களாலாயது. முதல்நின்ற 'ஆ' என்னும் எழுத்து ஆன்மாவை [உயிரை] உணர்த்தும் எவ்வாறெனில் ஆன்மா என்னும் சொல்லில் முதலில் நிற்கும் ஆகாரம் ஆலயம் என்பதன் முன்நின்று பசு என்னும் பொருளை உணர்த்தும் பின் நின்ற 'லயம்' என்னும் சொல்லுக்கு - ஒடுங்குதல் அல்லது ஐக்கியப்படுதல் என்றால் மார்க்கத்தில் பொருந்துதல் என்று அர்த்தம்.

இனி ஆன்மா பரமான்மா, சீவான்மா என இருவகைப்படும். ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்கள் என்றும் இல்லாது அகண்டாகாரமாய், எங்கும் வியாபித்து திருவருளால் அனுபவித்து, உணரப்படுவதாகிய முழுமுதற் கடவுளுக்கு பரமான்மா என்றும், மும்மலங்களிலும் கட்டுப்பட்டுப் பிறப்பு இறப்புக்களிற் கிடந்து உழன்று, பொறி வழிபட்டுச் செல்லும் ஆன்மாவிற்குச் சீவான்மா என்றும் பெயர்.

பரமான்மாவும் சீவான்மாவும், ஏககாலத்திலேயே உளவேயாயினும் முழுமுதற் கடவுளாகிய பரமான்மாவும் மும்மல சம்பந்தமான சீவான்மாவும் சமனுறமாட்டா. பரமான்மா உயர்வுதான், சீவான்மா தாழ்வுதான்

(1) ஆணவம் - அறிவை மறைப்பது.
(2) மாயை - அறிவைச் சிறிது விளக்குவது.
(3) கன்மம் - மேற்காட்டிய இரண்டினால் வரும் பலனை நுகரச் செய்வது.

இனித் தாழ்வான ஆன்மா (சீவான்மா) உயர்வான பரமான்மாவை அடையப் பிரயத்தனப் படுகின்றது. எப்படியெனில் ஓர் தனவந்தனிடம் ஏழைகள் சேர்ப்பப் பலவிதமான ஊழியஞ் செய்து அதன் மூலமாகத் தாம் அவனிடமாகவுள்ள திரவியத்தைப் பெற்றுச்சுகமடைய விரும்புகின்றார்களோ, அதுபோல, தாழ்வான சீவான்மா உயர்வான பரமான்மாவிடத்துப் பலவிதமான பத்தியைச் செலுத்தி அதன் மூலமாகத் தான் அவரிட்டுள்ள பேரின்பத்தைப் பெற்றுச் சுகமடைவதற்கு முயற்சி செய்கின்றது.

(வளரும்)

## சிவபாத சுந்தரனார் நினைவு
## சைவசித்தாந்த நினைவு

நாவலர் சைவ நன் மரபுக்கெடுத்துங்காட்டாக வாழ்நாள் முழுவதும் சமய நெறி மனத்தால் வாக்கால் வழிபடு முறையால் விளங்கியவர் மேன்மைத் திருவாளர் சு. சிவபாத சுந்தரம்பிள்ளை அவர்கள். சைவசீலத்தை அநுசரிக்க முன்மாதிரியாகத் திகழ்ந்த பெரியார் இவர்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களைச் சுலபமாக யாவரும் அறியும் வண்ணம் சைவபோதம் மூன்று பிரிவாக எழுதி மூன்றாவதிலே திருவருட்பயனின் பெரும் பொருளை அருமையாக விளக்கி வைத்தனர். சைவக் கிரியை விளக்கம் என்ற நூலை ஆக்கினர். இந் நூல் மறுபடியும் அச்சேற வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றதென்பதைச் சைவ சங்கங்கள் அவதானிப்பது நன்று.

ஆங்கில மொழிமூலம் புறமதத்தவர்கள் எம் மதத்தின் உட்பொருளை இலகுவில் அறிய வைத்தவர் பிள்ளை அவர்கள். அன்னாரை எந்நாளும் சைவ உலகம் மறக்க முடியாது.

## கோப்பாய்க் கிளை நிர்வாகிகள்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக் கோப்பாய்க் கிளையின வருடாந்தக் கூட்டத்தில் தெரிவான நிர்வாக சபையின் விபரம் பின்வருமாறு:

தலைவர்:
திரு. அ. பஞ்சாட்சரம்
உப தலைவர்கள்:
திரு. ம. க. நடராசா
திரு, அ. முதலித்தம்பி
செயலாளர்:
திரு. கி. சிவானந்தய்யர்
உப செயலாளர்:
திரு. செ. குணசிங்கம்
தனாதிகாரி:
திரு க. மார்க்கண்டு
நிர்வாக சபை உறுப்பினர்கள்:
திரு. சா. சபாநாயகம்
,, சா. சிங்கராசா
,, சீ. க. சுப்பிரமணியம்
,, ச. கதிரவேலு
,, வீ. ஆறுமுகம்
,, க. சோதிலிங்கம்
,, அ. பொன்னம்பலம்
,, இ. தம்பித்துரை
,, சி. செல்வரத்தினம்
,, கி. இரவீந்திரலிங்கம்
,, பொ. சிவலிங்கம்
,, அ. சுப்பிரமணியம்

## தாகூரின் 'செவ்வலரிகள்'

வெளியீட்டு விழாவில் பாராட்டு

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் மண்டபத்தில் 21.7.76 புதன்கிழமையன்று இரவீந்திரநாத் தாகூரின் "செவ்வலரிகள்" என்னும் நூலின் தமிழாக்கத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது. இதைத் தமிழாக்கம் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதலிய பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ள இலண்டனில் வசிக்கும் திரு வை. முத்துக்குமாரசுவாமி ஆவர்.

விழாவுக்குத் தலைமை வகித்தவர் வைத்ய கலாநிதி க. திருநாவுக்கரசு ஜே. பி., திரு. ஐ. தி. சம்பந்தன வரவேற்புரை நிகழ்த்தினார். "செவ்வலரிகள்" என்னும் தாகூரின் நாடக நூலைப் பற்றியும் அதன் தமிழாக்கத்தின் சிறப்பைப் பற்றியும் யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர் க. சிவராமலிங்கம் பி. ஏ. அவர்கள் வெகு அழகாக எடுத்துரைத்தார். தாகூரின் உள்ளத்தை உணர்ந்து தமிழாக்கம் செய்யப்பட்ட நூலாயிருந்தது ஆயினும், தமிழ் மொழி பெயர்ப்பில தமிழ் மரபுக்கு ஏற்ற நல்ல முறையிலேயே செய்யப்பட்டுள்ளது என அவர் தனது உரையில் எடுத்துக் கூறினார். நூலின் முதற்பிரதியை திரு. எஸ். வி முருகேசு அவர்கள் வாங்கினார்.

நூலாசிரியரின் சார்பில் அவரது மனைவி திருமதி தங்கரத்தினம் முத்துக்குமாரசுவாமி பதிலுரை கூறினார்,

"மகாதேவ சுவாமிகள் நூற்றாண்டு நினைவுவிழா மலர் என்னும் நூல்" செவ்வலரிகள் வெளியிட்ட இதே சமயத்தில் வெளியிடப்பட்டது. சிறப்புச் சொற்பொழிவாக "என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் பொருள்பற்றி இலங்கை பல்கலைக்கழக யாழ். வளாக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்.

திண்ணபுரம்

## திருமுறை விழா

காரைநகர் திண்ணபுரம் இந்து இளைஞர் மன்றத்தினர் சென்ற மாதம் 25ந் திகதி முதல் 28ந் திகதி வரை நான்கு நாட்கள் ஈழத்துச் சிதம்பரத்தில் திருமுறை விழாவினை சிறப்பாக கொண்டாடினர் இவ்விழாவினை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தொடக்கி வைத்தார், அவர் தமது தொடக்கவுரையில் பேசும் போது திருமுறைகளுக்கு விழாவெடுத்து நிற்கும் இளைஞர்களின் தொண்டு மகத்தானது திருமுறைக்கு விழா வெடுப்பதோடு மட்டும் நில்லாமல் அவற்றை பேணிக் காத்து அவற்றில் உள்ள பாடல்களை பண்ணோடு பாட வேண்டும். பண்பாடாவிட்டால் பண்பாடு குன்றிவிடும் பண்ணிசைப்பாடியே எமது நாயன்மார்கள் கண்ணையும், பெண்ணையும் பொன்னையும் பெற்றார்களென்றால் பண்ணின் பெருமையை என்னென்று சொல்ல முடியும். மேலைநாட்டு இசைகள் மேலோங்கி ஆதிக்கம் செலுத்தி, இளைஞர்களை தம்வசப்படுத்தும் இந்தக் காலத்தில் பண்ணிசை பயில வரும் இளைஞர்களின் தொகை மிகவும் குன்றி விட்டது. எங்கள் ஆதீனத்தில் பண்ணிசை வகுப்புகள் நடாத்தி பரீட்சை வைத்த போது இவ்வாண்டு முந்நூறு மாணவர்கள் மாத்திரம தோற்றினர் என்றால் எமது பண்ணிசையை எவ்வளவு தூரத்தில் இளைஞர் சமூகம் மதிக்கிறது என்று கூறினார்.

அவர் தமது முடிவுரையில் திண்ணபுரத்தில் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்து இளைஞர் மன்றம் தமது முதலாண்டு முடியு முன்னரே திருமுறை விழா எடுத்தமை மிகவும் பாராட்டத் தக்கது. எனவே இப்படிப்பட்ட விழாக்களை திங்கள் தோறும் நடாத்தி மேலான சைவ நெறி மேதினியில் மேன்மை கொள்ளச் செய்துவைக்க திண்ணபுரத்து அறிஞர்களும் துணையாக இருக்கவேண்டும் என்றார்.

இதற்கு முன்னர் சுவாமிகளை மறைக்காப்பாளரும், காரைநகர் யாழ்நகர் கலாசாலை முன்னைநாள் தமிழ் விரிவுரையாளருமாகிய வித்துவான் க. முருகேசன் வரவேற்புரை கூறினார், அன்றைய தினம் சிறப்பு சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட திரு. க. சற்றம்பலம் (தலைவர் மணிவாசகர் சபை காரைநகர்) அவர்கள் 'திருமந்திரம்' என்னும் பொருளில் பேசும் போது, திருமந்திரத்தில் பல சித்தாந்தக் கருத்துக்கள் கொண்டு இருக்கின்றன. அதில் உள்ள பாடல்கள் எமக்கு விளங்கக்கூடியதாக இருந்தாலும் அவை வேறு தத்துவக் கருத்துக்களை விளக்கிக் கொண்டு இருக்கின்றன அதனை விளங்குவதற்கு நல்ல குருவை நாம் நாடவேண்டும் திருமந்திரத்தின் சைவ அன்பர்கள் பக்தி சிரத்தையோடு கற்றுத் தெளியவேண்டும் என்றார், விழாவின் இறுதியில் ஈழத்துச் சிதம்பர புராண படனம் நடைபெற்றது.

(வளர்ச்சி 2-ம் பக்கம்)

### உச்சியில் வாழ்க்கைத் துயர் ஊன்றுகின்றதே!

உச்சி மாநாடு தொடங்க முன்பாகவே உள்ளூர் மக்களின் உணவுப் பொருள்களின் விலை உச்ச வரம்புக்கு மேலாகக் கிளம்புகின்றது. அதிகாரிகளையும் உச்சி விடுவார்கள்போலிருக்கிறது வியாபாரிகள்,

தண்ணீர்ப் பஞ்சம்; குடிநீர், ஆற்று நீர், குட்டை நீர் யாவும வற்றும் பஞ்சம். கதிர்காமம், திருக்கேதீச்சரம் முதலியனவற்றிற்கு யாத்திரை செய்வோர் படும் அல்லல் இவையெல்லாம் ஒருபுறமிருக்க உச்சிப் பேச்சுக்கள் மறுபுறம்!

வீ டெரியும் போது வீணை வாசித்த வேந்தனின் நினைவு இவ் வேளையில் எழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## பரமசாந்த நிலையின் பக்குவம்

வன்ஏவஇஹ் கர்மாணி ஜிஜீவிஷேந்சதம் சமா:|
ம் த்வயி ந அந்யதா இதோஸ்தி ந
கர்மலிப்யதே நரே ||

தேகத்தோடு நூறாண்டு வாழவேண்டிய, செயல் ற்கையனுகிய நீ, சதா உனது கர்மாக்களைச் ய்து கொண்டே அவ்வாறு வாழ விரும்புதல் ண்டும். இதைத் தவிர உனக்கு இங்கு வேறு வழியுமில்லை. ஆசைகளும் பந்தங்களும் அற்று, ம்பப் பலன் கருதாது அவ்வாறு செய்வதனுல், ந்தக் கர்மாக்களினுல் வரக்கூடிய பலன்கள் ன்றும் உன்னைத் தீண்டப்போவதில்லை.

— ஈஸாவாஸ்ய உபநிடதம்,


திருச்சிற்றம்பலம்

ழ்க அந்தணர் வானவராவினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே:
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

நள ஹூ ஆடி மீ உ௨ -௨ வெள்ளி


## சுவாமி தரிசனத்துக்குத் தேவையான சூழ்நிலை

நெடுந் தொலைவிலிருந்து பாதம் நோவ நடந்து ளைத்து வரும் அடியார்கள் சுவாமிக்குத் தீபாராதனை டக்கும் வேளையில் அடுக்குத் தீபஒளியையோ கர்ப் ர விளக்குச் சோதியையோ மூர்த்தியையோ ஒன் றையும் கண்களால் கண்டு ஆறுதல் பெற முடியா வர்களாய் அலமந்து நிற்கும் நிலை எல்லாப் பெருங் காயில்களிலும் ஏற்படுகின்றது.

பெருந் திருவிழாக் காலங்களில் வழிபடுவோர் தாகை மிக மிகக் கூடுதலாக இருப்ப துண்மையே னினும் நாம் பெறும் இன்பம் நம்முடன் நிற்ப ர்களும் உறவேண்டும் என்று பெருந்தன்மையான னப் பான்மையுண்டாகுமேயானுல் எல்லோரும் இந் த் தீபாராதனை நிகழ்ச்சியைக் கண்டு களிக்க முடி ம். யான் மட்டும் வழிபாட்டு வசதி பெற்றுற் போதும் என்று நினைத்து ஏனையோருக்கு எள்ளள வேனும் இடங்கொடாது தன் காரியம் பார்க்கின்ற ர் கும்பிட்டால் என்ன? கும்பிடா தொழிந்தால் ன்ன? அன்னுர் எய்தும் பயன் எவ்வளவாயிருக் தம் என்று சொல்லவும் வேண்டுமோ?

ஆலய நிர்வாகிகள் மட்டும் வழிபாட்டு ஒழுங்குக் நப் பொறுப்பானவர்கள் என்று கூற முடியாது. சுவாமி தரிசனம் செய்வோர் மனம அகன்றதாய் விரிந்ததாய் அன்பு மயமாய் இருக்குமேயானுல் யாவ நம் தீப சோதியைக் கண்குளிரக கண்டு ஆனந்தங் கொள்ளும் பாக்கியத்தைப் பெற முடியும்.

பொதுவாக வழிபடுவோர் அறிந்தோ அறியா மலோ எண்ணியோ எண்ணுமலோ பல வேறு வழி யாக ஒழுங்கு முறைக்குப் பாதகமாகவே கோயில் களில் நடந்து கொள்கின்றனர்.

கும்பிடுவதற்கு நேரம் வரையறை செய்யவியலா தென்பதை மனத்தில் வைத்துக்கொண்டு அடியார்கள் பலரும் அந்தத் தெய்வ தரிசனத்தை முறையாகப் பெறுவதற்காக ஆகக் குறைந்த பொழுதில் அந் நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு மற்றையோருக்கு வழி விடுதல் மரபாகுமல்லவா? கூட்டமாக அடியார்கள் கூடியிருக்கும் வேளையில் நமஸ்காரம் செய்வது சிரம மாகும என்பதை நினைவிற்கொண்டு இவ்வித வழி பாட்டுக்கு வசதியான ஒழுங்குகளைத் தாமாகவே செய்வது முறையாகும். அங்கப் பிரதிட்டை செய் வோரின வசதிக்கு ஏனைய அடியார்கள் பெரிதும் துணையாக இருத்தலும முறையாகும். பொதுவாக வழிபடுபவர்கள் எல்லோரும் வசதியாக வணங்கும் நிலைமை உண்டாவதற்கு அவர்களே பொறுப்பான வர்கள் என்று சொலவது பொருத்தமாகும்.

க. பொ. த. உயர்தர வகுப்பு

## இந்து சமயம்

இரு வினுத்தாள்கள் ஒவ்வொன்றும் 3 மணித்தியாலங்கள்

வினுத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது பரீட் சார்த்திகள் முதற் பகுதிக்கும், இரண்டாம் மூன்றும் பகுதி களில் ஒன்றுக்கும் விடையளிக்க வேண்டும்.

**வினுத்தாள் 1**

பகுதி I பொது

1. வேதங்கள் - உபநிடதங்கள் / ஆகமங்கள் - உபாகமங்கள் / புராணங்கள் - இதிகாசங்கள் } இவற்றைப் பற்றிய வரலாற்றாசிரியர் குறிப்பு
   உதவி நூல்: வடமொழி இலக்கிய வரலாறு (வைதீக இலக்கியம்) கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்
2. இந்து தர்மம்: குணதிரயங்கள், சுவதர்மம், பரதர்மம்
   உதவி நூல்: பகவத் கீதை 3ம், 14ம் அதிகாரங்கள்
   சேர். பொன். இராமநாதன் விளக்க உரை
3. நீதி நூல்: திருக்குறள்
   அறவறவியல் முதல் 5 அதிகாரங்கள்

பகுதி II சைவ சித்தாந்தம்

1. தேவாரம்:
   (அ) சம்பந்தர்: பின்வரும் முதலையுடைய 4 பதிகங்கள் 'தோடுடைய செவியன்', 'மந்திரமாவது நீறு', 'வேயுறு தோளி பங்கன்', 'காதலாகிக் கசிந்து'
   (ஆ) அப்பர்: பின்வரும் முதலையுடைய 3 பதிகங்கள் 'கூற்றுயினவாறு', 'சொற்றுணை வேதியன்', 'வேதாகி விண்ணுகி'
   (இ) சுந்தரர்: பின்வரும் முதலையுடைய 3 பதிகங்கள் 'பித்தா பிறை சூடி', 'மற்றுப் பற்றெனக்', 'அந்தணாளன்'
2. திருவாசகம்: திருவம்மானை - திருவெம்பாவை
3. பெரிய புராணம்: அப்பூதியடிகள் புராணம்

பகுதி III வைஷ்ணவ சித்தாந்தமும் பிறவும்

1. திவ்விய பிரபந்தம்: (அ) பெரியாழ்வார் திருமொழி 2வது பாட்டு
   மெய்க்கூற்று, அரவணையாய், பொய்ப்பத்து என்ற தொடக்கப் பாக்கள்
2. ஸ்ரீமத் பாகவதம் - குசேல படலம்
3. தாயுமானவர்: பரசிவ வணக்கம் முழுவதும்

**வினுத்தாள் 2**

பகுதி I பொது

1. சைவம், வைஷ்ணவம், சாக்தம் (வரலாற்றுக் குறிப்புகள்)
2. சைவம், வைஷ்ணவம் - தொன்மையும் வளர்ச்சியும் பல்லவர், சோழர் காலம் வரை

பகுதி II சைவ சித்தாந்தம்

1. (அ) பதி, பசு, பாசம் (ஆ) சைவ நற்சிந்தனைகள்
2. சந்தான குரவர் வரலாறு

உதவி நூல்:
(அ) திருவருட் பயன்: திரு சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
(ஆ) முப்பொருள் விளக்கம்: சிவ ஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள்
(இ) இந்திய தத்துவ ஞானம்: கே. லட்சுமணன் (பக்கம்: 340-422)

பகுதி III வைஷ்ணவ சித்தாந்தமும் பிறவும்

1. பரம்பொருள்: ஜீவன், ஜகத் (இறைவன் ஆன்மா, உலகம்) தத்துவ விளக்கமும
   (அ) அத்வைதம் (ஆ) விசித்தா வைதம்
   (இ) துவைதம் - இவை பற்றிய சுருக்க விளக்கம்
2. கர்ம யோகம்: பக்தி யோகம்
   - பகவத் கீதை 3ம், 12ம் அதிகாரங்கள்
3. சங்கரர், இராமானுஜர், மருத்துவர் ஆகியோர் வரலாறு

உதவி நூல்: (அ) பகவத் கீதை 3ம், 12ம் அதிகாரங்கள்
சேர். பொன். இராமநாதன விளக்க உரை
(ஆ) இந்திய தத்துவ ஞானம் (பக்கம்: 2.5 - 340)

குறிப்பு: 1976 நவம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் சைவ பரிபாலன சபையாரது சமய பாடப் பரீட்சையில், இந்து நாகரீகம், இந்து சமயம் ஆகிய இரு பகுதிகளுக் கும் பரீட்சை நடாத்தப்படும்.

"துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் — எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்உண் பவர்"

நேயர் நெஞ்சம்

## யோகக் கலையை வளர்ப்போம்

சென்ற 30-7-76 இந்துசாதன இதழில் "யோகாசன உபயோகம்பற்றி — ஆசானுடன் - அன்புரைக் கலந்தாடல்" என்னும் மகுடந் தாங்கிய கட்டுரையைப் பல முறை படித்தேன். ஈழத்தில் யோகக் கலைக்கே தம்மை அர்ப்பணித்து பேச்சிலும் மூச்சிலும் நாளும் நற்றொண்டு புரிந்து வருகிறுர் ஸ்ரீ சிதானந்த யோகி அவர்கள் என்று பலரும் கூறக் கேட்டிருக்கிறேன். பலபாடசாலைகளில் சுவாமிகளை அழைத்து யோகக் கலையைப்பற்றி உபந்நியாசங்களும், யோகாசனப்பயிற்சிகளும் நடாத்தி யிருக்கினுர்கள். இவ்வளவு அரும் பெரும் சேவை புரிந்து வரும் துறவிகளை அணுகி முறையாக அவர்களைப் பற்றிய செய்திகளை வாசகர்கள் அறியவைத்தமை பாராட்டுதற்குரியதாகும். யோகக் கலை விருத்திக்கு சுவாமிகள் கூறியுள்ள ஆலோசனைகள் யாவரதும் சிந்தனைக்குரியன. யோகியாரவர்களின் குரு பத்தி மெச்சத் தக்கது. இந்து சாதனம் மூலம் யோகியாருடன யோகக் கலை விளக்கங்கள் பெற ஒழுங்கு செய்துதவுவீர்களாயின் யாவருக்கும் பெரும் பயன் விளைக்கும் என்பதைப் பணிவுடன் தெரியத் தருகிறேன்.

இங்ஙனம்,
கா. மகாதேவன்
88, பழைய சோனகதெரு
கொழும்பு, 4-8-76.

## திண்ணபுரம் திரு:

1ம் பக்கத்து வளர்ச்சி

இரண்டாம் நாள் சிறந்த கவியரங்கு நடைபெற்றது இக்கவியரங்கே திண்ணபுரத்தில் நடந்த முதற் கவியரங்கு ஆகும். யாழ்ப்பாணம் இந்துக கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்துவான் சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இக்கவியரங்கில் சந்தக் கவிமணி செ. சிவப்பிரகாசம் "மூவர்தமிழ்" என்னும் பொருளிலும் "வாசகமும் சேவையும்" என்னும் பொருளில் காரைநகர் கவிஞர் வே. குமாரசுவாமி அவர்களும், "திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும்" என்னும் பொருளில் தலைமைக் கவிஞர் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்களும "மூலன் மொழிந்த மொழி" என்னும் பொருளில் "இந்துசாதனம்" பத்திராதிபர் சட்டத்தரணி நம. சிவப்பிரகாசம் அவர்களும் பாடினுர்கள். "பதினுராந் திருமுறை" பற்றி பாடவிருந்த கவிஞர் சமுகமளிக்காதபடியால் அப்பொருள்பற்றி வித்துவான் சி. ஆறுமுகம அவர்களே சில கவிகள் பாடினுர். இறுதியாக "மாண்புறு மாக் கதை" என்னும் பொருளில் சிவஸ்ரீ. நா சுப்பிரமணிய ஐயா M A (துணை நூலகர் யாழ் இலங்கைப் ப கலைக் கழக யாழ்ப்பாண வளாகம்) அவர்கள் பாடினுர். இக்கவியரங்கில் பாடிய கவிஞர்கள் அனைவரும் சொல் நயம் பொருள் நயம் கவிநயம் கொண்ட பாடல்களை பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். தலைமைக்கவிஞர் மற்றைய கவிஞர்களை அறிமுகம் செய்து வைத்துப் பாடுகையில் நகைச் சுவை கலந்து பாடி சபையோரை மகிழ்வித்தார். இப்படியான கவியரங்கை ஒழுங்கு செய்த இளைஞர்களை பொது மக்கள் சென்று விதந்து பாராட்டினுர்கள். இரண்டு நாட்களும பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

—(மற்றைய நிகழ்ச்சிகள் மறு இதழில் வரும்)

தொகுப்பு: வேற்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிந்தனையைத் திருந்த வைத்துச் சிந்திமின்'

## வித்துவான் மு. கந்தையா B. A. அவர்கள்

( முன் வளர்ச்சி — 18 )

அருணந்தியாருடைய இக்கருத்துக்கும், சாக்கியர் பற்றி யாம் முன்கண்ட கருத்துக்கும் ஒப்புமையிருத்தல் யாம் குறிக்கொளற் பாலதொன்றும். சாக்கியரும் மெய்ப்பயன் நல்கும் சமயம் எத்தகையதாயிருத்தல் வேண்டும் என எண்ணி ஒரு முடிபுக்கு வந்தார். 'செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனுஞ் சேர்ப்பானும் உய்வகையால் நான்காகும்' எனக்கொண்ட'என அவர்கண்டமுடிபு பெரியபுராணத்திற் பேசப்படுகின்றது மேல், இம்முடிவு எச்சமயத்திற்கு மிகவும் பொருந்துகிறது என்றுபார்த்தார். 'இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக்கில்லையென' உணர்ந்தார் என்கிறார் சேக்கிழார்.

அருணந்தியாரும் சரியான சமயம் ஒன்று எப்படியிருக்கும் என எண்ணி மேற்கண்டவாறு ஒரு சித்தாந்தஞ் (முடிவு) செய்தார். அச் சிந்தாந்தத்திற்கு வேதாகம சமயமாகிய சைவம் முற்றிலும் பொருந்தியுளதாமாறு கண்டிருக்கின்றார். இங்ஙனம் ஒப்புமை காண்க.

மேற்குறித்த செய்யுளில், 'நீதியினலிவையாவும் ஓரிடத்தே காண நின்றதியா தொருசமயம்' என்ற தொடரில் குறிக்கப்படும் ஒருமைப்பாடே இங்கு யாம் வேண்டும் சமய ஒருமைப்பாடாம் ஒவ்வோர் சமயமும் தம்மெல்லா வற்றுக்கும் மேலாகப் பரந்து விரிந்து உயர்ந்து நிற்கும் ஒரு சமயத்தில் ஆங்காங் கொடுங்கிப் பிணக்கற்று நிற்கும் அமைதியிலேயே சமய ஒருமைப்பாடு தங்கியுள்ளவற்றை யாமுணர வழிவகுக்கின்றது இச் செய்யுள்.

இங்ஙனமன்றி, சமயங்களின் சிறப்பியல்புகளாகிய குறிகள் அடையாளங்கள் வழிபாட்டு முறைகள் கிரியா சங்கள் ஆகியவற்றை விலக்கிவிட்டுப் பார்த்தால் ஞானமோ பத்தியோ என்பவற்றில எதோ ஒன்றன் பேரில் எல்லாச்சமயங்கட்கும் ஒருமைப் பாடிருத்தல் காணலாம் எனக்காட்டுவாரு, புத்[illegible], அல்லா, சிவன், விஷ்ணு என்பன போன்ற பெயர் வேறுபாடுகளைத் தவிர்த்து ஒரேபொதுப் பெயராக இறை என்றோ கடவுள் என்றோ வழங்குதல் போன்ற சிலவற்றின் மூலம் சமய ஒருமைப் பாடுகாணலாம் என உணர்த்துவாரும இக்காலத்துப் பலராவர். நம்பூருவபக்கத்தார்கள் இவற்றில் முன்னையது கொள்ளுங் கருத்தினராதல இக்கட்டுரையில் அவர் கருத்தெனக் குறிப்பிடப்பட்ட ஒவ்வொன்றினாலும் ஊர்ஜிதமாகின்றது.

இவ்வகையான ஒருமைப் பாட்டுணர்வுகள் தற்காலிகமாக இன்றைய சமூக அரசியல் தேவைகளை முன்னிட் டெழுவன வாகலின் அவை பயன் தருகில் அத் தேவைகளைப் பயத்தல் மட்டில் நின்றொழிவனவே யன்றிச் சமயப் பயனை எவ்வகையானும [illegible]க்குதலிலவாம் என்க.

நம்மறிவால் நாம் மேற்கொள்ளும் முடிவுகளைச் சமய முடிவுகளாகக் காட்ட முனைதல் தகுதியாகாது அங்கீகரிக்கப்பட்ட சமய சாஸ்திர ரீதியாக ஏற்பட்ட முடிபுகளே சமய முடிபுகளாக அமையுந் தகுதி வாய்ந்தனவாம். இது எம் மதத்துக்கு மட்டுமல்ல; மற்றெம மதத்துக்குமே சமமதமானதாதல் அறிக

---

## உலகச் செழிப்புக்கு உணர்ந்து விழா எடுத்தல் வேண்டும்

[ முன் வளர்ச்சி — 9 ]

'நண்ணிய ஒருமை அன்பின் நாருறுபாசத்தாலே திண்ணிய தொண்டர் பூட்டி இழுத்தபின் திறம்பி நிற்கநந்தார். "மண்பகிர்ந்தவனுங் காணுமலரடி இரண்டும் யாரே பண்புடை அடியார் அல்லால் பரிந்து சேர் காணவல்லார்" என்பது சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு. ஒண்ணுமோ! கலயனார்தம் ஒருப்பாடு கண்ட போதே அண்ணலார் நேரேநின்றார் அமரரும் விசும்பில் ஆர்த்தார்" இந்த அன்பின் திண்மையினால் இறைவனையடைந்தார்.

யாழ்ப்பாணக்குடா நாடெங்கும் விழாக்கோலம் கொண்டிருக்கிறது. பற்பல கிராமங்களின் கோயில்களிலே திருவிழாக்கள் நடைபெறுகின்றன - ஆயினும் மழையின்மையும் வறட்சியுமே தாண்டமாடுகின்றன. வேதவேதியர் சிவசிந்தனையோடும் பயபக்தியோடும அன்போடும் கொடியேற்றம், திருவிழாக்கள் முதலியவற்றின் உண்மையை அறிந்த விளக்கத்தோடும் பூசைசெய்ய வேண்டும். போட்டிக்குத் திருவிழாக்கள் செய்யாமல் பயபக்தியோடு திருவிழாக்கள் நடைபெற வேண்டும. இந்தச் சிறப்பை உலக மாதாவாகிய காமாட்சி அம்மையார் காஞ்சயம் பதியில்செய்து காட்டியிருக்கிறார் - இதனைத் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்திலுள்ள செய்யுட்கள் (49 - 72) கூறுகின்றன ஆகையால் அறிவின் எல்லை கடவுள் என்பதும் இல்லறத்தினதும் கல்வியினதும் பூசைகளினதும் நோக்கம் உலகச் செழிப்பும ஆன்ம விடுதலை என்பதும் புலனாகின்றன.

—[ திரு. செ. சின்னத்துரை இளைப்பாறிய ஆசிரியர் ]

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. ஈடு / 14704

காரைநகர் கிழக்கு, காரைநகர்

ஆ சங்கரப்பிள்ளை இராசரத்தினம்

எதிராக வழக்காளிகள்

வேதாடைப்பு, காரைநகர் வடக்கு காரைநகர்

ஆறுமுகம் நவரத்தினம

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு 14704 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனல் விபரிக்கப்படும ஒரு துண்டுக் காணியை 1976ம ஆண்டு ஆவணி மாதம 19ம் திகதி (19-8-76) வியாழக்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மூதல் வட்டி ரூபாய் 5384/-ம் 16-1-1975 தொடக்கம் 29 9-1975 வரைக்கும் ரூபாய் 4350/-க்கு 9 வீத வட்டியும் அதனபின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 465/99.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸதிறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வடக்கிற் கிலந்தைசாலை' நில பரப்பு 53 குளி ½. இதில் வடக்கருகாக அரைவாசி நிலப்பரப்பு 26 குளி 9¼ பனைகளும எல்லை கிழக்கு ரேட்டு தெற்கு மிகுதி அரைவாசியிலிருந்து இதற்கு சரஸ்வதிக்கு எழுதிய ஆதனத்துக்கும இடையே இதிலிருந்து சரஸ்வதியின் ஆதனத்திலிருந்து இரு காணிகளுக்குரியதாக விடப்படும 10 அடி அகல நீளம் மேற்கு மாரிமுத்து சிவபாக்கியத்திற்கும கனகசபை பெண் மகேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள். வடக்கு துரையப்பா கைம்பெண நயன லட்சுமிக்கும பாலசந்திரன் தேவமங்கைக்குமுரிய ஆதனங்கள் இதடங்கலும.

நா. ஸ்ரீ ரங்கநாதன்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

6 கன்னதிட்டி ரேட்
யாழ்ப்பாணம
3-7-76

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. MB 14303

உரும்பிராய் தம்பு சிவசுப்பிரமணியம் மகள் இந்திராணி

எதிராக வழக்காளி

யாழ்ப்பாணம நல்லூர் 111 பருத்தித்துறை வீதி

1. இளையவி செல்லரும 2. செல்லர் நவரெத்தினமும்

எதிராளிகள்

MB. 14308-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் (ஆவணி, மீ 31 உ (31-8-76) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்திற்குள் நின்று பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 8750/- மேலும் இதில் 5000/ ரூபாவுக்கு 14-3-74 தொடக்கம் 11-7-74 வரைக்கும வருடமொன்றுக்கு 15% வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், வழக்குச் செலவு ரூபா 510-15 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும் இதில் வட்டியால் ரூபா 1050/-ம், வழக்குச் செலவால் ஒரு பகுதியாக 150/- ரூபாவும் கழித்து மிகுதி.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டமும் பகுதியும் நல்லூர் கோயிற்பற்று நல்லூரிறை "தவசி வெளி" நிலப்பரப்பு 10 குளிகள் 11 பதிவு D201/-53 இதில் வடக்குப்பக்கமாக நிர்ணயிக்கப்பட்ட நலப்பரப்பு4 குளிகள் 1¾ இது 26 11-67 ல் அளவையாளர் ஏ. லாசரஸ் அவர்களால் தயாரிக்கப்பட்ட 3381-ம் இலக்கப்படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுளளது இதற்கு. எல்லை கிழக்கு - செல்லத்துரை மனைவி மீனுமபாளுக்கும் வேலுப்பிள்ளை செல்வரத்தினத்துக்கும மனைவி நல்லம்மாவுக்கும் மற்றவர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு கனகசபை மனைவி அமினிப்பிள்ளை இவர்களின பிள்ளைகளினுதனம. மேற்கு இராமு சின்னராசாவுக்கும் இராமலிங்கம மனைவி யோகம்மாவுக்கும. தெற்கு இளையவி செல்லருக்கும், மனைவி சின்னத்தங்கச்சிக்குமுரிய மிகுதி ஆதனமும். முழு ஆதனமாகிய நிலப்பரப்பு 10 குளிகள் 11 இல் சொல்லப்பட்ட படத்தில் லொட் 2 என காட்டப்பெற்ற ஒழுங்கையும சொல்லப்பட்ட படத்தில் லொட் 2 ஊடாக போய் வர உரிமையும் இதிலடங்கியவைகளும் பதிவு D 342 / 167.

வி. செ. குட்டிப்பிள்ளை
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
643, காங்கேசன்துறை வீதி, விலைமதிப்பாளர்,
யாழ்ப்பாணம் 29-7-76 ஏலவிற்பனவாளர்.

---

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

மாவட்ட நீதிமன்றம் சாவகச்சேரி

(1) கணபதிப்பிள்ளை சுப்பிரமணியமும பெண்
(2) பொன்னம்மாவும் நுணாவில் கிழக்கு சாவகச்சேரி

வழக்காளிகள்

இல. 4446 எதிராக

கந்தையா தில்லைநாதன் சாவகச்சேரி தெற்கு, சாவகச்சேரி

எதிராளி

சாவகச்சேரி நீதிமன்றத்தால் ஷை 4446ம் இலக்க வழக்கில் திரும்பவும் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின்படி பின்னால் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1976 ம் வருஷம் ஆவணி மாதம் 11ஆம் திகதி புதன்கிழமை (11-3-76) முற்பகல் 10-30 மணியளவில் அக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

தீர்வைத்தொகை ரூபா 7400ம் மேலும் ரூபா 6000க்கு 19-6-73 தொடக்கம் 21-6-74 வரையும் 10% வட்டியும் பின்கூடி வரும் தொகைக்கு 21-6-74 தொடக்கம் இறுக்கும் வரை 5% வட்டியும் செலவு ரூபா 512/25ம் (18-2-76 லும் 20-8-75 லும் முறையே 3000/- -500/- செலவில் 150/- சட்டப்பட்டது கழிக்கப்பட்டுள்ளது)

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சாவகச்சேரி இறை உளுத்தம்புலம நில, பர 11 இந்த நிலப்பரப்பு பதினொன்றும் F 363/50-ல் பதியப்பட்டுள்ளது எல்லை கிழக்கு சின்னத்தம்பி மகன செல்வரத்தினத்துக்கும சகோதரங்களுக்குமுரிய ஆதனம் வடக்குரேட்டு மேற்கு சிவப்பிரகாசம் பெண செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு ஷை எதிராளிக்குரிய ஆதனம இவ்வெல்லைக்குட் சேர்ந்த காணியடங்கலுமிதைச் சேர்ந்தவைகளுமாகும்.

எஸ். வி. சத[illegible]
சாவகச்சேரி நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
1[illegible]-6-76

---

## மண்டலாபிடேகம்

திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சனப் பெருவிழாவை யடுத்து தினமும் இலட்சார்ச்சனை நிகழ்ந்து வருகிறது. ஆவணித் திங்கள் ஐந்தாம் நாள் (21 - 8 - 76) மண்டலாபிடேகமும் திருப் பூந்தண்டிகை விழாவும் நிகழும்,

---

## வேல் விழா

ஆடி வேல் இரதோற்சவம் நாளை (7-8-76, சனி) கொழும்பு சமமாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமிகோவில காவடி பவனியுடன ஆரம்பமாகும்.

---

சபை ஆதரவில்

## சுந்தரர் குருபூசை

—0—

சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை சைவபரிபாலன சபை ஆதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது 2-8-76 முற்பகல் சிவபூசை, புராணபடனம் விசேடபூசை, மாகேசுர பூசை ஆதியவை நிகழ்ந்தன,

இரவு விரிவுரைக்கூட்டம் சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. யாழ் திருமுறை மன்றத்தினரும், யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களும, கூட்டுப் பிரார்த்தனை நடாத்தினர். திருவாசகமணி க. மாணிக்கவாசகர் அவர்கள் (யாழ். திருவாசகமடம்) சுந்தரமூர்த்தி சுவாமிகளது திருக்கயிலாய வரவேற்பு எனும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### THOUGHTS TO BE TREASURED

முத்திக்கு வித்து முதல்வன் றன் ஞானமே,
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே,
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்,
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே.

The seed (cause) of emancipation (from bondage) is Godly Knowledge. The seed of love (or devotion) is humility and meditation. The seed of miraculous deeds is Sivohambhavanai; and the seed of Saktinipadam or descent of Divine Grace is Upa Sandham or mental calmness.

Hindu Organ

FRIDAY, AUGUST 6, 1976

## Vicious Volcanic Violence

TAKING toll of a nearly a million people in the industrial city of Tangshan in the People's Republic of China, an earthquake of unprecedented impact is still feared to be a lurking danger to the Capital City-Peking.

Acts of Gods cannot be explained. That is the only consolation the terror-stricken teeming millions of China can have. The sympathies that have been sincerely expressed by the different countries of the world can only help in strengthening the efforts of the Chinese Government in its stupendous work of relief and rehabilitation.

The world is at present experiencing the worst disasters imaginable in the form of devastation by drought or deluge or disruption of volcanic regions. The loss of life, limb and property is several fold more than that by waged wars of the past. Whether in war or in peace, calamities befall mankind notwithstanding the wonderful inventions of science and the amazing progress in the efforts of man to scan stars and space or to probe into the affairs of distant planets.

What then is the significance of this paradoxical problem. Humanity seems to have fallen from grace. Mankind appears to have mistaken the mirage of life for spiritual merit. And the only answer is a return to religious practice.

## The Non-Aligned Conference

A very important matter in connection with the forthcoming Conference to whose ideals millions of people including those in Sri Lanka are devoted is for the participating countries to consider the desirability of establishing a standing and permanent organization to seek to implement its policy and principles from time to time and from day to day in all parts of the world.

Something like the United Nations Organization

desideratum. A permanent Office and Secretariat are necessary. It is trusted that, in the first instance, the Government of Sri Lanka which is acting as the host country would give its mind to this subject, if it has not already done so, to this humble submission. Our country, Sri Lanka, would be an appropriate centre for the establishment of such an Office and Secretariat International circumstances and other valid reasons merit such choice if I may be pemitted to say so with the utmost deference.

S. SVASUBRAMANIAM
Honorary Secretary,

## A Rare and Historic Kumbhabisekam at an Ancient Sivasthala Sri Lanka

BY V SIVASAMY

Thirukketheeswaram is one of the most ancient Saiva sacred places hallowed by the hymns of the Saiva Saints Gnana-Sambandar and Suntharamoorthy of the 7 — 8th centuries A. D. The antiquity, beauty and sacredness of this holy place is attested to even by earlier non Saivite works like the Dhatus Vamsa and the late inscriptions from 'Anuradhapura' and 'Kathirgamam'. The ancient temple continued to flourish till the late 16th when it was finally destroyed by the Portuguese. From that time, till the end of the 19th century, this holy place was not much known to the Saivites of Sri Lanka until the Sri la Sri Arumuga Navalar pointed out its great importance to the Saivite world. Thereafter, due to the centering efforts of the generous patrons and devotees like Pasupati Chettiyar and Sir Kandiah Vaithianathan and others, this this place is gradually regaining its former glory with the rebuilding of the new temple consecrated on the 4th July.

The grand Kumbhabhisekam ceremony was one of the most important and historic of such ceremonies performed in our country The Purvanka ceremonies started eight days earlier In the beautifully consecrated yagasala there were 33 homakundas. A number of Brahmin experts in the Agamic rites performed the ceremonies as enjoined in the Vedas and the Agamas. The entire procedure was directed and supervised by the Sivacarya from the Dharmapuram Adinam of Thamilnadu. He had come with three others for this purpose. The whole week when this ceremony was on, Thirukketheeswaram became the centre of a great and living Vedic and Agamic tradition. The recitation of the Vedas, the repetition of the mantras, and the clouds of sacrificial smoke filled the place, purifying, as it were, everyone who had come there to see this grand ceremony. The recitation of the hymns from the four Vedas by the four Sivacaryas from India was very mellifluous and superb. The Sivacaryas of our country were no less inferior to them. Apart from the Vedagamic rites, there were bha-

hymns from the Saivite Thirumurais adding greater life and colour to the whole process.

On the final day, it was a rare and superb sight to see the Kumbhabhisekam being performed on the stupis of the main shrines (of Ketessanatha and Gauriyamba) the two main gopuras, the Sivalingam, the image of the Goddess and the Parivaradevatas. Thousands of devotees thronged to have a darsan of this, one could not see the consecration of all yet, Though one could see the ceremony performed over many whether the stupis, gopuras or from any point.

Further, expert Nagasuram, Tavil Vidvans played beautifully their vadyams. There were sermons on various aspects of Saivaism including the Kumbhabhiseka tattava. Souvenirs were released to commemorate the historic occasion of these; the one by the Thirukketheeswaram Restoration Committee is the comprehensive one - The souvenirs released by the Nallai Adeenam and the Milk White Soap Limited also are commendable. All these indicate the vitality and the dynamism of Saivism in Sri Lanka.

## Dangers a Ruler Should Guard Against

It is the duty of the ruler of a country to uphold righteous tenets, impartially administer justice and ensure the peace and happiness of the people. Several are the sources of potential danger to these objectives and he has to guard against them vigilantly if he is to retain his right to rule. He should strengthen the defence forces so as to preserve the country from aggression by enemies. Internally, he has to save the people from anti social elements who are out to disturb peace and commit crimes. Sometimes, wild animals are likely to endanger the lives and property of citizens and it is for him to provide adequate safety.

More serious than these, however, is the likelihood of his relatives, friends and followers, taking advantage of their proximity to him, harassing the people On top of all is the threat to people's interests, which is likely to come from within himself—the tendency on his part to abuse power. It is possible that he finds the supreme authority vested in him an irresistible temptation and he may commit the mistake of using it for personal aggrandisement and for the benefit of his favourites, in utter disregard of the norms of justice and fairness. Unless he is extremely wary, these pernicious tendencies will strike at the root of his power and cause his downfall.

These dangers, highlighted by Sekkizhar in Peria Puranam, were dwelt upon by Sri S. Ramaswami Sastrigal, in his discourse at Siva. Vishnu Temple, T. Nagar, while narrating the story of Manuneedhi Chozhan, who did not hesitate to drive his chariot over his son, as punishment for killing a calf. In appreciation of the king's steadfast adherence to Dharmam. Lord Thyagaraja, enshrined in Tiruvarur gave darshan to him, and, due to His Grace, the prince, the calf and the minister, who killed himself after refusing to carry out the king's orders, came back to life

"Madras Hindu."

## Sale of Unredeemed Pawned Jewellery

I shall sell by public auction the unredeemed jewellery pawned before 1 8 - 1975 with Mr. V. M. Kubarasah of 124 Station Road Chunnakam on Saturday 28 - 8 - 1976 commencing at 9-30 a. m. at the said pawn shop.

S. Mahadevan,
Auctioneer

553, K. K. S. Road,
Jaffna.

(5 6 & 13)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Saiva Prakasa Press 450 K. K. S. Road Vannarponnai, Jaffna on Friday August 6, 1976.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org